## சிறப்புக்குறிப்பு 20 முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2010[1]

### உண்மைத்துறை

| | | |
|---|---|---|
| 2010 ஏப்பிறல் 21 | - | சுனாமிக்குப் பின்னரான கடலோர புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமான"தியவர சவிய" ஆரம்பிக்கப்பட்டது. |
| 2010 ஏப்பிறல் 30 | - | பாற் பசுக்களை கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையே மாற்றுவதற்கு உதவியளிக்கும் முதலாவது பால் வள நிலையம், வேளாண்மை, கால்நடை அபிவிருத்திக்கடன் திட்டத்தின் கீழ் மீவனாபலன, ஹொரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. |
| 2010 திசெம்பர் 09 | - | சந்தையில் விலைகளை நிலைநிறுத்துவதற்காக அரிசியின்மீது அதிகபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன. இதன்படி சம்பாவின் (கீரி சம்பா மற்றும் சுதுறு சம்பா தவிர்ந்த) அதிகபட்ச சில்லறை விலை ரூபா 70 ஆகவும் நாடு, சிவப்பு மற்றும் வெள்ளைப் பச்சரிசி ரூபா 60 ஆகவும் இருந்தது. |
| 2011 சனவரி 01 | - | சராசரி மின் தீர்வை 8 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. |
| **அடுத்து வருபவை** | - | வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட தேசிய வேளாண் - வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. |

### வெளிநாட்டுத்துறை

#### வர்த்தகமும் தீர்வையும்

| | | |
|---|---|---|
| 2010 சனவரி 01 | - | சில வகை பிவிசி தோலாடைகளின் இறக்குமதி மீதான மிகைக் கட்டணம் நீக்கப்பட்டது. |
| | - | 2008 நவெம்பர் 06ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1574/15 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் மீதான பொதுவான மற்றும் முன்னுரிமை சுங்க இறக்குமதித் தீர்வை மீது 15 சதவீதத்தில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் மேலும் 6 மாதங்கள் நீடிக்கப்பட்டது. |
| 2010 சனவரி 19 | - | பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகளின் மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| 2010 சனவரி 25 | - | சோள இறக்குமதியின் மீது 12.5 சதவீதமான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. இதன்படி, பொருந்தத்தக்க தீர்வை 2.5 சதவீதமாக இருக்கும். |
| 2010 பெப்புருவரி 10 | - | நெத்தலிக் கருவாடுகள், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பாசிப்பயறு, பருப்பு, தகரத்திலடைக்கப்பட்ட மீன், சீனி, சின்ன வெங்காயம் மற்றும் உள்ளி என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 2010 பெப்புருவரி 14 | - | சில வகை பிவிசி தோலாடைகளின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு 13 சதவீதமான பகுதியளவிலான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் நீடிக்கப்பட்டது. |
| 2010 பெப்புருவரி 16 | - | பால்மா இறக்குமதி மீதான மொத்த மீளப் பெறத்தக்க வரி வீதமானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.100 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூ.50 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2010 பெப்புருவரி 18 | - | சில வகை சமையல் எண்ணெய் மற்றும் அவற்றின் பகுதிகளின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ.25 கொண்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| | - | மாதமொன்றுக்கு உச்ச அளவான 20,000 லீற்றர்கள் மற்றும் மாத எல்லை 20,000 லீற்றருக்கு அதிகமான மதுசாரத்தின் (தேறல் மதுசாரம்) இறக்குமதி மீது முறையே லீற்றர் ஒன்றிற்கு ரூ.200 மற்றும் லீற்றர் ஒன்றிற்கு ரூ.500 ஆன கலால் தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2010 பெப்புருவரி 25 | - | மோல்ட் பிரித்தெடுப்புகளின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் நீடிக்கப்பட்டது. |
| 2010 மாச்சு 01 | - | தங்கத்தின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க அனைத்து வரிகளும் தீர்வைகளும் நீக்கப்பட்டன. |
| 2010 மாச்சு 20 | - | அரிசியின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வை நீக்கப்பட்டதோடு, சுங்கத் தீர்வை மற்றும் ஏனைய பொருந்தத்தக்க வரிகளும் தீர்வைகளும் மீள விதிக்கப்பட்டன. |
| 2010 மாச்சு 21 | - | சீனியின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ.1 ஆன விசேட பண்டத் தீர்வையானது மேலும் மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2010 மே 01 | - | கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கிலோகிறாமொன்றுக்கு ரூபா 8 இற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி பொருந்தத்தக்க சுங்கத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 2 ஆக இருக்கும். |
| 2010 மே 10 | - | நெத்தலிக் கருவாடு, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பருப்பு, பாசிப்பயறு, செத்தல் மிளகாய் மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முன்னைய வீதங்களில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |

[1]. இது 2010இல் இடம்பெற்ற முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் வழி முறைகளையும் உள்ளடக்குகின்றது. 2011இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றுமு 2011இல் நடைமுறைப்படுத்த இருக்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும்கூட உள்ளன.

2010 யூன் 01

- ஐந்து பிரிவு சுங்கத் தீர்வைக் கட்டமைப்பானது (0,2.5,6,15 மற்றும் 28 சதவீதம்) நான்கு பிரிவு கட்டமைப்பிற்கு (0,5,15 மற்றும் 30 சதவீதம்) குறைக்கப்பட்டது.
- இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வையின் மீதான 15 சதவீத மிகைக் கட்டணம் நீக்கப்பட்டது.
- மூலப் பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் இறக்குமதி மீது அதிகமான வேளைகளில் பிரயோகிக்கப்படும் 2.5 சதவீதமான சுங்கத் தீர்வை நீக்கப்பட்டது.
- உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செஸ் வரியானது நீக்கப்பட்டது.
- உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது.
- உந்து ஈருருளிகளுக்கான சுங்கத் தீர்வையானது 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன், உந்து ஈருருளிகள் மீது 25 சதவீதமான உற்பத்தித் தீர்வை விதிக்கப்பட்டது.
- சில வகை இலத்திரனியல் பொருட்களின் வகைகள் மற்றும் அவற்றின் பாகங்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த சுங்கத் தீர்வை, பெறுமதி சேர் வரி, சமூகப் பொறுப்பாண்மை தீர்வை, செஸ் மற்றும் கலால் தீர்வை என்பன நீக்கப்பட்டன. ஆகவே இந்தப் பொருட்கள் மீது செலுத்தத்தக்க வரிகள் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மட்டுமேயாகும்.
- குளிரூட்டிகள், உறைய வைக்கும் கருவி, பாத்திரம் கழுவும் இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், கைக்கடிகாரங்கள், சட்டைப்பைக் கடிகாரங்கள், ஏனைய கடிகாரங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் என்பவற்றின் இறக்குமதி மீதான செஸ் வரி நீக்கப்பட்டது
- வர்ணப் பூச்சுக்கள் மற்றும் வார்னிஸ் என்பவற்றின் மீதான கலால் தீர்வை நீக்கப்பட்டது.
- வர்ணப்பூச்சுக்கள், வார்னிஸ் மற்றும் வர்ணப் பூச்சு நிரப்புக்களின் இறக்குமதி மீதான செஸ் வரி கிலோ கிராமொன்றுக்கு ரூ.85இலிருந்து கிலோக் கிராமொன்றுக்கு ரூ.50 இற்குக் குறைக்கப்பட்டது.
- அச்சிடும் மையின் இறக்குமதி மீதான செஸ் வரியானது கிலோகிராமொன்றுக்கு ரூ.25 இலிருந்து கிலோ கிராமொன்றுக்கு ரூபா 15இற்குக் குறைக்கப்பட்டது.
- சில வகை அழகு அல்லது ஒப்பனைப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வீதங்கள் 35 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூ.250இற்கு, இவற்றுள் உயர்வான வீதத்திற்கு திருத்தப்பட்டது.
- கைத்தொழில் மொனோகாபொக்ஸ்லின் கொழுப்பமிலங்கள், சுத்திகரிப்பின் மூலம் பெறப்படும் அமில எண்ணெய்கள், கைத்தொழில் கொழுப்பு மதுசாரங்கள் விடயத்தொகுதி மீதான செஸ் வரி நீக்கப்பட்டது.
- சில வகை குங்குலியம், செலுகோசு மற்றும் அவற்றின் இரசாயன பெறுதிகள், பொலிமர்களான எதிலின், புரபிலின், ஸ்ரைரின், வினால் குளோரைட், வினைல் அசடேட், அக்ரிலிக் பொலிமர்ஸ், பொலியாசெட்டல்ஸ், ஏனைய பொலியஸ்டர்ஸ் மற்றும் முதனிலை வடிவில் இருக்கும் பொலியாமிட்ஸ் என்பவற்றின் இறக்குமதி மீதான செஸ் வரியானது 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- சீமெந்தின் இறக்குமதி மீதான செஸ் வரியானது 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- தள ஓடுகள், கருங்கல், பளிங்குக்கல் மற்றும் அவை போன்ற கட்டடக்கல் அல்லது படிகைக் கற்களின் சில வகைகளின் இறக்குமதியின் மீது விதிக்கப்பட்டிருந்த செஸ்வரியானது 30 சதவீதம் அல்லது கிலோ கிராமொன்றுக்கு ரூபா 50 இலிருந்து 20 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூபா 30 இற்கு இவற்றுள் உயர்வான வீதத்திற்குக் குறைக்கப்பட்டது
- இரும்பினால் அல்லது உலோகக்கலப்பற்ற உருக்கினால் செய்யப்பட்ட சில வகைப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வரியானது கிலோகிராமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூபா 15 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- இரும்பு அல்லது உலோகக் கலப்பற்ற உருக்கு, துருப்பிடிக்காத உருக்கு, இவற்றிலான சிலவகைக் கம்பிகள் இரும்பினால் அல்லது உருக்கினால் செய்யப்பட்ட சில வகை கோணங்கள், தோற்றங்கள் மற்றும் பாகங்களின் (U,I,H வடிவ பாகங்கள் போன்றவை) இறக்குமதி மீதான செஸ் வரி நீக்கப்பட்டது.
- நாணயத் தாள்களின் இறக்குமதி மீதான (இணங்குவிப்புக் குறியீடு 4907.00.90) பெறுமதி சேர்வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை என்பன நீக்கப்பட்டன.

2010 யூன் 21

- சீனி இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிராமொன்றுக்கு ரூபா 1 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூபா 5இற்கு மேலும் மூன்று மாதங்களுக்கு அதிகரிக்கப்பட்டது.
- கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீதான கிலோகிராமொன்றுக்கு ரூபா 8 கொண்ட தீர்வைத் தளர்த்தல் நீக்கப்பட்டதுடன் இதனால் பொருந்தக்கூடிய சுங்கத் தீர்வையானது 15 சதவீதம் அல்லது கிலோகிராமொன்றுக்கு ரூபா 10, இவற்றுள் எது அதிகமானதோ அந்த வீதத்தில் இருந்தது.

2010 யூலை 08

- உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்களின் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி நீக்கப்பட்டது.

| | |
|---|---|
| 2010 ஓகத்து 10 | - சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 25 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - உள்ளியின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 30இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | - முழுமையான பச்சைப் பட்டாணி மற்றும் முழுமையான பட்டாணி இறக்குமதியின் மீதான விசேட பண்டத் தீர்வை கிலோக் கிறாமொன்றுக்கு ரூபா 15 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | - முழுமையான மைசூர் பருப்பு மற்றும் உடைக்கப்பட்ட மைசூர் பருப்பு என்பவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முறையே, கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 1இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10இற்கும், கிலோகிறாமொன்றுக்கு ரூபா 2 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 15இற்கும் அதிகரிக்கப்பட்டது. |
| | - நெத்தலிக் கருவாடுகள், உருளைக்கிழங்குகள், உடைக்கப்பட்ட பச்சைப் பட்டாணி, உடைக்கப்பட்ட பட்டாணி, பாசிப்பயறு, செத்தல் மிளகாய் மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முன்னைய வீதங்களில் மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 2010 ஓகத்து 16 | - இணங்குவிப்புக் குறியீடு 1209.99.10இன் கீழான பழ விதைகளின் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி நீக்கப்பட்டது. |
| 2010 ஓகத்து 27 | - 2010 செத்தெம்பர் 9 வரை உருளைக் கிழங்குகள் மீது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 20 கொண்ட மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டது. |
| 2010 செத்தெம்பர் 10 | - உருளைக் கிழங்குகளின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது மேலும் மூன்று மாதங்களுக்கு கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 30 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2010 செத்தெம்பர் 21 | - சீனியின் இறக்குமதி மீதான கிலோகிறாமொன்றுக்கு ரூபா 5 கொண்ட விசேட பண்டத் தீர்வையானது மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| 2010 ஒத்தோபர் 13 | - இனப் பெருக்கத்திற்கான கோழிக்குஞ்சு மற்றும் ஏனைய கோழிக் குஞ்சுகளின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை, பெறுமதி சேர் வரி, சமூகப் பொறுப்பாண்மை வரி, செஸ்வரி, துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன நீக்கப்பட்டன. |
| | - முட்டைகள் மற்றும் முட்டை மஞ்சட்கரு என்பவற்றின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை, பெறுமதிசேர்வரி, சமூகப் பொறுப்பாண்மை வரி மற்றும் செஸ் வரி என்பன நீக்கப்பட்டன. |
| | - பறவை இறைச்சியின் இறக்குமதி மீதான பெறுமதிசேர்வரி, சமூகப் பொறுப்பாண்மை வரி மற்றும் செஸ் வரி என்பன நீக்கப்பட்டதுடன் சுங்கத் தீர்வையானது 30 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2010 ஒத்தோபர் 30 | - பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 25 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு 10 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | - உருளைக் கிழங்குகளின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | - சில வகை சமையல் எண்ணெய் மற்றும் அவற்றின் பகுதிகளின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 45 அல்லது 15 சதவீதமான சுங்கத்தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| 2010 நவெம்பர் 23 | - கோழி இறைச்சியின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ.150 ஆன இறக்குமதித் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. இதன்படி பொருந்தக்கூடிய தீர்வை வீதம் கிலோகிறாமொன்றுககு .50ஆக இருக்கும். |
| | - பறவை முட்டைகளின் இறக்குமதி மீது கிலோகிறாமொன்றுக்கு ரூ.100 ஆன முழுமையான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| | - பெற்றோல், நிலக்கரி மற்றும் பிற்றுமன் என்பவற்றின் இறக்குமதி அல்லது வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - இலங்கை சுங்கத்தினால் பயன்படுத்தப்பட்ட வரிச் சமன்பாடுகள் மாற்றப்பட்டது. |
| | - பெற்றோல் இறக்குமதியின்மீது வழங்கப்பட்டிருந்த முழுமையான தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூபா 20 இற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி, பொருந்தக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூபா 15 ஆக இருக்கும். |
| | - டீசல் இறக்குமதியின் மீது வழங்கப்பட்டிருந்த முழுமையான தீர்வைத் தளர்த்தல் லீற்றரொன்றிற்கு ரூபா 11 இற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி, பொருந்தக்கூடிய தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூபா 4ஆக இருக்கும். |
| | - அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் மற்றும் தொலைபேசி அட்டைகளின் இறக்குமதி மீது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 600 ஆன செஸ் வரி விதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| | - இணங்குவிப்புக் குறியீடு தலைப்புக்கள் 30.01,30.02,30.03,30.04 மற்றும் 30.06 என்பவற்றின் கீழ்வரும் மருந்தாக்கல் பொருட்கள் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - மின்னியல் கலப்பு ஊர்திகளின் இறக்குமதியின்போது பிரயோகிக்கப்படும் சுங்கத் தீர்வை மற்றும் கலால் தீர்வை என்பன திருத்தப்பட்டன. |
| | - இலத்திரனியல் பொறிகள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை திருத்தப்பட்டது. |
| | - 1977 நவெம்பர் 15ஆம் திகதிய இல 291/7 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1977ஆம் ஆண்டு 1ஆம் இலக்க சிறப்பு இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டது. |
| | - தொலைத் தொடர்பு /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/வணிக நடைமுறை ஒப்பந்த சேவைதுறைகள், வேளாண்மைத்துறை, இனிப்பு மற்றும் வெதுப்பக பொருட்களின் உற்பத்தி, நலன், மருந்துப் பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் (ஆயுர்வேத உட்பட) சுற்றுலா மற்றும் கட்டுமானக் கைத்தொழில், வியாபாரக் குறியிடப்பட்ட பொருட்களின் கொள்வனவு, வாகன பொருத்தல் கைத்தொழில், நலன், கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டது. |
| 2010 திசெம்பர் 10 | - நெத்தலிக் கருவாடு, உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், பட்டாணி, பச்சைப் பட்டாணி, பாசிப்பயறு, பருப்பு, தகரத்திலடைக்கப்பட்ட மீன், சீனி , சின்ன வெங்காயம் மற்றும் உள்ளி என்பவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வையானது முன்னைய வீதங்களில் மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. |
| | - 2010 நவெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் டீசல் இறக்குமதி மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. |
| 2010 திசெம்பர் 22 | - 1977 நவெம்பர் 15ஆம் திகதிய இல 291/7 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1977 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க சிறப்பு இறக்குமதி உரிம ஒழுங்கு விதிகள் மேலும் திருத்தப்பட்டது. |
| 2011 சனவரி 01 | - நிதி அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, அரசாங்க அமைச்சுக்களுக்கு நேரடியாக வழங்கப்படும் கொடைகள் அல்லது வெளிநாட்டு கடன்களின் மூலம் நிதியிடப்படும் எந்தவொரு உட்கட்மைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - நிதி அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, இலங்கையில் ஆயுர்வேத தயாரிப்புக்களை (அழகு சாதன பொருட்கள் தவிர்ந்த) உற்பத்தி செய்வதற்கெனப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத தயாரிப்புக்களை பொதி செய்வதற்கென பிரத்தியேகமாகப் பயன்படும் பொதிசெய்யும் பொருட்களின் இறக்குமதி என்பன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - இணங்குவிப்புக் குறியீடு 2713.20 மற்றும் இணங்குவிப்புத் தலைப்பு 27.14 என்பவற்றின் கீழ் வரும் பிற்றுமனின் இறக்குமதி மற்றும் இணங்குவிப்பு குறியீடுகள் 8701.10.10, 8701.10.90, 8701.90.10 மற்றும் 8701.90.20 என்பவற்றின் கீழ்வரும் இழுவை இயந்திரங்களின் இறக்குமதி என்பன தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - தோல் மற்றும் பாதணிக் கைத்தொழிலுக்கான பொறி மற்றும் உபகரணம், உயர் தொழில்நுட்ப மருத்துவ, ஆய்வுகூட மற்றும் கல்விசார் உபகரணம், வாடகை ஊர்தி, அளவுமானிகள், வேளாண்மை பொறிகள் மற்றும் பகுதிகள், இலத்திரனியல் உபகரணங்கள், நாகரீக அணிகலன்களின் தயாரிப்பிற்காகப் பயன்படும் பொருட்கள், தொலைத் தொடர்பாடல் கைத்தொழிலில் பயன்படும் பொருட்கள், பொறி, உயர் தொழில்நுட்ப சாதனம், வான்கலப் பயணப் பாவனையாக்கி மற்றும் பாகங்கள் போன்றவற்றின் சில வகைகளின் இறக்குமதி பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| 2011 சனவரி 11 | - பெற்றோல் இறக்குமதியின் மீது வழங்கப்பட்டிருந்த சுங்கத் தீர்வைத் தளர்த்தலானது லீற்றரொன்றுக்கு ரூபா 20 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூபா 30 இற்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, பிரயோகிக்கத்தக்க தீர்வை வீதம் லீற்றரொன்றிற்கு ரூபா 5 ஆக இருக்கும். |
| 2011 சனவரி 22 | - பால்மா இறக்குமதியின் மீது முழுமையான சுங்கத் தீர்வைத் தளத்தல் வழங்கப்பட்டது. இதன்படி, பால்மா இறக்குமதி மீது துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் தேசத்தைக் கட்டியமெழுப்பும் வரி என்பன மட்டுமே பிரயோகிக்கத்தக்கதாக இருக்கும். |

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

**2010 மாச்சு 11**

- பின்வரும் வகைகளைச் சேர்ந்த இலங்கையர்கள் வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.
    - வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாக சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர்;
    - இலங்கையில் வதிகின்ற அதேவேளையில் இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழில் பயிற்சி பணிகளை வழங்குகின்ற தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பனியொன்று அல்லது நிறுவனம்;
    - இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு நிதியமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று;
    - வெளிநாட்டில், வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று ;
    - வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமொருவர்.
- வர்த்தக வங்கிகளில் வதிவற்றோரால் பேணப்படும் பங்கு முதலீட்டு ரூபா கணக்கு, திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - 2 மற்றும் திறைசேரி உண்டியல் முதலீட்டு ரூபாக் கணக்கு தேசாபிமானி என்று பெயரிடப்பட்ட தற்போதுள்ள முதலீட்டுக் கணக்குகளை ஒன்றிணைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இவ்வொன்றிணைக்கப்பட்ட கணக்கானது பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு என மீள பெயரிடப்பட்டது.
- அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் எதிர்நோக்கும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வைக் காப்பிடுவதற்காக அவர்களுடைய வாடிக்கையாளர்களுடன் முன்னோக்கிய ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது.
- இறக்குமதி செய்யப்படவிருக்கும் தெரிவு செய்யப்பட்ட விடயங்களின் விலை விபரப் பட்டியல் பெறுமதி மீதான முன்கூட்டிய கொடுப்பனவுகளுக்கு எதிரான தற்போதுள்ள 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடு நீக்கப்பட்டது.
- இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவுகள் மீதான இடைநிறுத்தம் நீக்கப்பட்டது.
- வதிவற்றோரின் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டுக் கணக்கு மற்றும் அத்தகைய வதிவற்றோரால் இலங்கையிலுள்ள கரைகடந்த வங்கிப் பிரிவுகளில் பேணப்படும் கணக்கு என்பவற்றுக்கிடையிலான நிதி மாற்றலுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

**2010 மே 07**

- "பன்னாட்டுப் பணி வழங்குவோர்கள் மற்றும் அவர்களுடைய ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்று பெயரிடப்பட்ட புதிய வெளிநாட்டு நாணயக் கணக்கைத் திறப்பதற்கு முதனிலை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**2010 யூன் 02**

- இலங்கையர்கள் வெளிநாடு பயணிக்கும்போது பயணப்படியின் ஒரு பகுதியாக வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தாள்களானது தற்போதுள்ள அளவான ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 2,000 இலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 2,500 அல்லது அதற்குச் சமமான ஏதாவது வெளிநாட்டு நாணயத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

**2010 நவெம்பர் 22**

- வெளிநாட்டுக் கம்பனிகள் இலங்கையில் வியாபார இடங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.
- உள்நாட்டுக் கம்பனிகளினால் வழங்கப்படும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட தொகுதி கடன்களில் முதலிடுவதற்கு வதிவற்றோர் அனுமதிக்கப்பட்டனர்
- இறக்குமதிகளுக்கான முற்கொடுப்பனவு ஐ.அ. டொலர்கள் 10,000இலிருந்து ஐ.அ.டொலர்கள் 50,000இற்கு அதிகரிக்கப்பட்டது.
- வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வெளிநாட்டு நாணய மற்றும் இலங்கை ரூபாயில் குறிப்பிட்ட வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- தற்காலிகமாக இலங்கைக்கு வந்த அல்லது வருகைதர இருக்கும் இலங்கையரற்றோர், வதிவற்றோர் இலங்கையரற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண இறக்குமதியாளர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- வெளிநாட்டு மூலங்களிலிருந்து கம்பனிகள் கடன் பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2011 சனவரி 01
- இலங்கையில் வதியும் தனிநபர்கள் மற்றும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், வெளிநாட்டு அரசாங்கங்களால் வழங்கப்படும் நாட்டிற்கான முறிகள் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்குகள் என்பவற்றில் முதலிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- இலங்கைக் கம்பனிகள் மற்றும் பங்குடமைகள் இலங்கைக்கு வெளியே வியாபார இடங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

அடுத்து வருபவை

- கம்பனி கடனட்டைகள்/பயண அட்டைகளை அறிமுகப்படுத்தல்.
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணய/வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் இருக்கும் நிதிகளை வங்கிகளுக்கிடையே/தனிப்பட்டவர்களுக்கிடையே மாற்றுவதற்கான பொதுவான அனுமதியை வங்கிகளுக்கு வழங்குதல்.
- மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணய நிலுவை மீதான உச்ச எல்லையை நீக்குதல்.
- பயண முகவர்கள், வானூர்தி நிறுவனங்கள், வெளிநாடுகளில் வலுச் செயற்றிட்டங்கள், கட்டட நிர்மாணம் போன்ற வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் பொறுப்பெடுக்கும் உள்ளூர் கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களை இலங்கையில் பொறுப்பெடுக்கும் உள்ளூர் கம்பனிகள் என்பவற்றுக்கு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அறிமுகப்படுத்தல்.
- கூறு நம்பிக்கைகள் மீதான வெளிநாட்டு நிதிய முதலீடுகள் மற்றும் வெளிநாட்டவர்கள் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகள், தளர்த்தப்படுதல்.
- கல்வி, பயண முகவர்கள் மற்றும் கப்பற்படுத்தல் முகவர்கள் ஆகியோரின் வெளிநாட்டு முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகள், அத்தகைய பணிகள் தற்போதைய அபிவிருத்திகளுடன் இசையும் விதத்தில் தளர்த்தப்படுதல்
- இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்களை வதிவற்றோரிடமிருந்து வாங்கும்போது அவர்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு வதிவுள்ளோருக்கு பொதுவான அனுமதியொன்றை வழங்குதல்.
- வெளிநாட்டில் கல்விகற்கும் இலங்கை மாணவர்கள், கல்வி நோக்கங்களுக்காக அந்தந்த நாடுகளில் கடன் பெறுவதற்கான பொதுவான அனுமதியை வழங்குதல்

## வெளிநாட்டுத்துறை

### அரச அரசிறை

2010 சனவரி 01
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வை 5 சதவீதம் அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 31.50 இலிருந்து 5 சதவீதம் அல்லது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 8.70 இவற்றுள் எது அதிகமோ அவ்வீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2010 மாச்சு 01
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது நீக்கப்பட்டது

2010 யூன் 24
- சிகரெட்டு மீதான கலால் தீர்வையானது அதிகரிக்கப்பட்டது.

2010 செத்தெம்பர் 01
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூ.13.12 என்ற வீதத்தில் மீள அறிமுகப்படுத்தப்பட்டது.

2010 ஒத்தோபர் 29
- சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வையானது அதிகரிக்கப்பட்டது.
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வையானது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 13.12இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 15.66 இற்கு அதிகரிக்கப்பட்டது

2010 நவெம்பர் 19
- தொலைத் தொடர்பாடல் பணிகளின் மீதான சூழல் பாதுகாப்பு வரி நீக்கப்பட்டது.

2010 நவெம்பர் 23
- வருமானவரி தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருட்கள் மீதான சமூகப் பொறுப்பாண்மை வரி நீக்கப்பட்டது.
- வெறிக் குடிவகை மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.
- வெறியக் குடிவகைகளைத் தயாரிப்பதற்கும் விற்பதற்குமான ஆண்டு உரிமக் கட்டணங்கள் திருத்தப்பட்டன.
- சிகரெட்டுக்கள மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

2011 திசெம்பர் 01
- அனைத்துத் தொலைத் தொடர்புப் பணிகளினதும் பன்னாட்டு நேரடி உள்வரும் அழைப்புக்களுக்கு நிமிடமொன்றுக்கு ரூபா 2 ஆக வரி விதிக்கப்பட்டது.

2011 திசெம்பர் 16
- திரவப் பெற்றோலிய வாயு மீதான கலால் தீர்வை நீக்கப்பட்டது.

2011 சனவரி 01

- 20 சதவீதமான பெறுமதிசேர் வரி 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி பூச்சிய வீதத்தைத் தவிர ஒரே ஒரு பெறுமதிசேர் வரி வீதம் மட்டுமே நடைமுறையிலிருக்கும்.
- தற்போதிருக்கும் 3 சதவீதமான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.
- தொலைத் தொடர்பாடல் பணிகளின் மீதான பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் செல்லூலர் கைத்தொலைபேசி பாவனையாளர் தீர்வை என்பவற்றை பதிலீடு செய்யும் 20 சதவீதத்திலான தொகுக்கப்பட்ட தொலைத் தொடர்பாடல் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொலைத் தொடர்பு தொழிற்படுத்துநர்களின் ஆண்டு மொத்தப் புரள்வின் மீது 2 சதவீதமான செஸ் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட புரள்வு வரி நீக்கப்பட்டது.
- பங்குக் கொடுக்கல் வாங்கல் தீர்வையானது 0.2 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 சனவரி 05

- வெறியக் குடிவகைகள் (தேறல் குடிவகை தவிர்ந்த ஏனைய அனைத்து வகை குடிவகை) மீதான கலால் தீர்வையானது புறூவ் லீற்றரொன்றுக்கு ரூபா 50ஆல் அதிகரிக்கப்பட்டது.

## அடுத்து வருபவை

2011 ஏப்பிறல் 01

- தனிநபர் வருமான வரியைக் கணிக்கும்போதான வரியற்ற படிகள் ரூபா 300,000 இலிருந்து ரூபா 500,000இற்கு அதிகரிக்கப்பட்டது.
- தனிநபர் வருமான வரிக்கட்டமைப்பு பின்வருமாறு திருத்தப்பட்டது.

| | |
|---|---|
| முதல் ரூபா 500,000 (வரி செலுத்தக்கூடிய வருமானம்) | - 4 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - 8 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - 12 சதவீதம் |
| அடுத்த ரூபா 500,000 | - 16 சதவீதம் |
| அடுத்த ரூபா 1,000,000 | - 20 சதவீதம் |
| மிகுதி | - 24 சதவீதம் |

- உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரிக் கணிப்பிற்கான வரியற்ற படி ரூபா 500,000இலிருந்து ரூபா 600,000இற்கு அதிகரிக்கப்படுதல்.
- அரசதுறை ஊழியர்களுக்கான உழைக்கும்போதே செலுத்தும் வருமானவரி அறிமுகப்படுத்தப்படுதல்.
- தொழிலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டும் வருமான மூலமாக இருக்குமிடத்து, உழைக்கும் போதே வரி செலுத்தும் திட்டத்தின்கீழ் (அரசாங்க, தனியார்துறை இரண்டும்) தொழில்நிலை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட வரியை இறுதி வரியாகக் கருதுதல்.
- மூத்த பிரசைகள் அரச வங்கிகளில் ரூபா 200,000 இலிருந்து ரூபா 500,000வரை வைப்பிலிடும் பணத்திலிருந்தான வட்டி வருமானத்தின் மீதான நிறுத்தி வைத்தல் வரிக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் விலக்குகளை நீடித்தல்.
- பிடித்து வைத்தல் வரியின் சுய பணிப்பு நோக்கங்களுக்காக தனிப்பட்டவர்கள் மற்றும் அறக்கொடை நிறுவனங்களின் மதிப்பிடத்தக்க வருமானத்தின் முதல் மட்டம் ரூபா 300,000 இலிருந்து ரூபா 500,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- பிடித்து வைத்தல் வரியின் சுய பணிப்பு நோக்கங்களுக்காக (2.5 சதவீதத்திலான சலுகை வீதத்தில்) மதிப்பிடத்தக்க இரண்டாவது மட்டம் ரூபா 1 மில்லியனிலருந்து ரூபா 1.5 மில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது.
- அரச பிணையங்களுடனான கம்பனி கடன் பிணையங்கள் மீதான பிடித்து வைத்தல் வரியை முகப் பெறுமதிக்கு நிர்ணயித்தல்.
- குறிப்பிட்ட கட்டணங்கள் மீதான பிடித்து வைத்தல் வரியை நீக்குதல்.
- கம்பனிகள் தவிர்ந்த தனி நபர்களுக்கான பிடித்துவைத்தல் வரியை 8 சதவீதத்திற்குக் குறைத்தல்
- கம்பனிகள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு (வெறியக் குடிவகை அல்லது புகையிலையுடன் தொடர்புபட்டுள்ள வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள் தவிர்ந்த) பொருந்தக் கூடிய நிறுவன வருமான வீதமானது 30 சதவீதம், 33 1/3 சதவீதம் அல்லது 35 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்குக் குறைத்தல்.
- வெறியக் குடிவகை அல்லது புகையிலை பொருட்களின் உற்பத்தி அல்லது இறக்குமதியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபர்கள் மீதும் பொருந்தத்தக்க கம்பனி வருமான வரி 40 சதவீததிற்கு அதிகரிக்கப்பட்டது.

- சலுகை கம்பனி வருமான வரி 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைத்தல்
- இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஆக்க உரிமையுடனான இலங்கை வியாபாரக்குறி மற்றும் 65 சதவீதத்திலும் அதிகமான உள்நாட்டு பெறுமதி சோக்கையைக் கொண்டிருக்கும் எந்தவொரு பொருளையும் உற்பத்தி செய்யும் எந்தவொரு நபர் மீதும் பொருந்தத்தக்க அதிகபட்ச கம்பனி வருமான வரியை மட்டுப்படுத்தல்.
- மன்றங்கள் மற்றும் சங்கங்கள், களஞ்சியப்படுத்தலுக்கான வசதிகளின் தொழிற்படுத்தல் மற்றும் பேணல், உள்நாட்டு மென்பொருள் அபிவிருத்தி அல்லது தொழிலாளர் வழங்கலின் மீதான கம்பனி வருமான வரிவீதத்தை 10 சதவீதத்திற்குக் குறைத்தல்.
- துணிகர முயற்சி மூலதனக் கம்பனிகள், பெற்றோலிய அகழ் ஆராய்ச்சி மற்றும் கேளிக்கை செய்வோர் அல்லது கலைஞர்கள் மீதான கம்பனி வருமான வரி வீதத்தை 12 சதவீதத்திற்குக் குறைத்தல்.
- பங்குடமையொன்றின் பகிரக்கூடிய இலாபங்கள் மீதான கம்பனி வருமானவரி வீதத்தை 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைத்தல்.
- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 16ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு வேளாண்மை நடவடிக்கைகளினதும் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான அதிகபட்ச கம்பனி வருமான வரி வீதத்தை 10 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தல்.
- மீன்பிடி, பயிரிடுகை மற்றும் வேளாண்மை விதைகளின் முதனிலை செய்முறைப்படுத்தல் மற்றும் பெருந்தோட்ட துறைகள், மதிப்பிடும் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு கம்பனி வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.
- ஆடை, தோல் உற்பத்திகள், காலணிகள் மற்றும் பைகளைத் தயாரிப்பதற்கான மூலம் முகாமைத்துவம், நிதி, விநியோகச் சங்கிலி மற்றும் பட்டியலிடல் தேவைகளுக்காக இலங்கையில் தலைமை அலுவலகங்களை அமைத்துள்ள வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு வழங்கல்களை மேற்கொள்வதன் மூலம் பெறப்படும் வெளிநாட்டு நாணய உழைப்புக்களை கம்பனி வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.
- சிறிலங்கன் ஏயார்லைன் லிமிடெட் மற்றும் மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்பன 10 வருட காலத்திற்கு அனைத்து மூலங்களிலிருந்தான வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. இவை, அவற்றின் மொத்த இலாபத்திலிருந்து 25 சதவீத பங்கிலாபத்தை அரசுக்கு கொடுப்பனவாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.
- இலங்கை மின்சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன அனைத்து மூலங்களிலிருந்துமான வருமான வரியிலிருந்து 5 வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டன. இவை அவற்றின் மொத்த இலாபத்திலிருந்து 25 சதவித பங்கிலாபத்தை அரசுக:கு கொடுப்பனவாகச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.
- பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு விநியோகத்தர்களின் புரள்வு, லொத்தர் முகவர்கள், கூறு நம்பிக்கைகள் அல்லது பரஸ்பர நிதிகள் மற்றும் அனைத்து விமானக் கம்பனிகள் மற்றும் கப்பற்படுத்துநர்கள் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுதல்.
- தற்போதிருக்கும் பொருளாதாரப் பணிக் கட்டணத்தின் அடி மட்டத்தை ரூபா 7.5 மில்லியனிலிருந்து ரூபா 25 மில்லியனிற்கு அதிகரித்தல்.
- தற்போது சமர்ப்பிக்க வேண்டியிருக்கிற பொருளாதாதர பணிக் கட்டணத்திற்கான காலாண்டு அடிப்படையிலான கூற்றுக்களை ஏற்கனவேயிருக்கும் காலாண்டு கொடுப்பனவுகள் மாறாதிருக்கும் அதேவேளை வருடாந்த கூற்றுக்களாக மாற்றுதல்.
- பொருளாதாரப் பணிக்கட்டணத்தின் ஏற்கனவேயிருக்கும் ஐந்து நிலை கட்டமைப்பு வீதங்கள் (0.05,0.1,0.25,0.5 மற்றும் 1 சதவீதம்) நான்கு நிலைக் கட்டமைப்புக்கு (0.1,0.25,0.5 மற்றும் 1 சதவீதம்) இலகுபடுத்தப்பட்டது.
- வரவு வரியை நீக்குதல்
- வருமான வரிகள் மீதான சமூகப் பொறுப்பாண்மை தீர்வையை நீக்குதல்.
- தேசிய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம், நிதிதிட்டமிடல் அமைச்சினால் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3 மில்லியனுக்குக் குறையாத குறைந்தபட்ச மூலதனத்துடன் (ஆனால் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 10 மில்லியனுக்கு கூடாமல்) புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் எந்த ஒரு கம்பனிக்கும் ஐந்தாண்டு வரி விடுமுறையை வழங்குதல்.
- உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிலிருந்து உற்பத்தி செய்யப்படும் அரிசி விற்பனைகளிலிருந்து எழும் புரள்வு மீது பொருத்தத்தக்க சலுகை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான 1.5 சதவீதம் நீக்கப்படுதல்.

## அரச செலவினம்

2010 சனவரி 01 - அரசதுறை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியானது அதிகரிக்கப்பட்டது. அரசதுறை ஊழியர்களுக்கான செலவுப் படியானது மாதமொன்றுக்கு ரூபா 750 இனால் ரூபா 5,250இற்கு அதிகரிக்கப்பட்ட அதேவேளை, ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியானது மாதமொன்றுக்கு ரூபா 375இனால் ரூபா 2,375இற்கு அதிகரிக்கப்பட்டது.

2011 சனவரி 01 - அனைத்து அரச பணியாளர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 5 சதவீதத்திற்குச் சமமான சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது.

- அரசதுறையிலுள்ள உயர் தரமல்லா வகுப்பைச் சேர்ந்த ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 600இனால் ரூபா 5,850இற்கு அதிகரிக்கப்பட்டது.
- ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 300 இனால் ரூபா 2,675இற்கு அதிகரிக்கப்பட்டது.
- பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கல்விசார் படி, நீதிப்பணிகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் வரும் நீதிமன்றங்களின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட தனிப்பட்ட படிகள் மற்றும் மருத்துவர்களுக்கு செலுத்தப்பட்ட தேவைக்கு அழைக்கும் படி என்பன 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

## அடுத்து வருபவை

- அரசதுறையிலுள்ள உயர்தர வகுப்பு ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியை மாதமொன்றுக்கு ரூபா 600 இனால் ரூபா 5,850இற்கு அதிகரித்தல்.
- 2011யூலையிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், 2004 சனவரி 01இற்கு முன்னர் இளைப்பாறிய ஓய்வூதியர்கள் மற்றும் 2004 சனவரி 01 இலிருந்து 2005 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் இளைப்பாறிய ஓய்வூதியர்களுக்கு முறையே மாதமொன்றுக்கு ரூபா 750 மற்றும் ரூபா 250ஆன அதிகரிப்பை வழங்கல்.

## படுகடன் முகாமைத்துவம்

2010 மே 21 - 2014ஆம் ஆண்டளவில், முதலீட்டுத்தரமான பீபீபீ என்ற அல்லது அதற்கு அதிகமான நாட்டிற்கான தரமிடலை அடையும் நோக்குடனான, நாட்டிற்கான தரமிடலை செயற்பாட்டில் அரச மற்றும் தனியார்துறை ஆர்வலர்களின் தீவிர பங்குபற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு நாட்டிற்கான தரமிடல் குழுவொன்று அமைக்கப்பட்டது.

2010 யூன் 30 - லங்கா கிளியரின் கிளைகள் மூலமான அரச பிணையங்களின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

2010 யூலை 09 - நாட்டிற்கான தரமிடல் செயற்பாட்டை வலுவாக்கும் தேவையைக் கருத்திற் கொண்டு, பாங்க் ஒவ் அமெரிக்கா மெரில் லின்ச், த றோயல் பாங்க் ஒவ் ஸ்கொட்லன்ட் பி.எல்.சி மற்றும் எச்எஸ்பீசி என்று பெயரிடப்பட்ட மூன்று நாட்டிற்கான தரமிடல் மதியுரையாளர்கள், நாட்டின் தரமிடல் மட்டத்தை உயர்த்துவதற்காக நாட்டு அதிகார சபைகள் மற்றும் தரமிடல் முகவர்களுடன் இணைந்து செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டனர்.

2010 ஓகத்து 06 - மூடிஸ் முதலீட்டுப் பணிகளிலிருந்து நாட்டிற்கான தரமிடலைப் பெறுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

2010 ஒத்தோபர் 04 - ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1000 மில்லியன் பெறுமதியான நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டன.

## அடுத்து வருபவை

- தகமை விதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், வர்த்தக வங்கிகளை அர்ப்பணிக்கப்பட்ட மூலதனமின்றி முதனிலை ஏலங்களில் பங்குபற்றுவதற்கு அனுமதித்தல்
- நிதியியல் துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கு இணைந்து செல்லும் விதத்தில் முதனிலை வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்தலும்.

## நிதியியல்துறை

2010 சனவரி 01 - புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், வேளாண்மை விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக் கடன் திட்டம் மற்றும் "கிருஷி நவோதய" சிறப்புக்கடன் திட்டம் எனப் பெயரிடப்பட்ட மூன்று வேளாண்மை கொடுகடன் திட்டங்களுக்கான கடன் வழங்கல் வீதங்கள் 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன.

- வைப்புக்களுக்கான வட்டி வீதம் மற்றும் முறிகள் அல்லது ஏனைய கருவிகளுக்கான கழிவு வீதத்தின் உச்ச எல்லையைத் திருத்துவதற்கான பணிப்புரையொன்று பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது.
- மூத்த பிரசைகளால் பேணப்படும் தவணை வைப்புக்கள் அல்லது சேமிப்பு வைப்புக்கள் மீதான வட்டிக்கு ஒரு சதவீதத்தினை கூடுதலாக வழங்குவதற்கு அனுமதிக்கும் பணிப்புரையொன்று பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

2010 சனவரி 05 - 2010 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம் பெற்ற வங்கிகளில் மூத்த பிரசைகளால் பேணப்படும் ரூபா வைப்புக்களுக்கு 20 சதவீத மேலதிக வட்டியைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

2010 சனவரி 19 - குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்நோக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளின் வங்கிக்கடன் வசதிகளுக்காக மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை வழங்கும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன.

2010 சனவரி 22 - இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் வடக்கின் எழுச்சி சிறப்புக்கடன் திட்டம் மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம் என்பவற்றின் ஆண்டொன்றுக்கான வட்டி வீதங்கள் 12 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன.

2010 பெப்புருவரி 25 - 2009இறுதியிலிருந்து விதிக்கப்பட்ட வேளாண்மைத்துறைக்கான 10 சதவீதக் கட்டாயக் கடன் வழங்கல் வீதத்தை எட்டாத வங்கிகள், பற்றாக்குறையை ஏனைய வங்கிகளூடாக வேளாண்மைத்துறைக்கு கடன் வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் தொழிற்படுத்தப்படும் சிறப்பு நிதியத்திற்கு மாற்றுமாறு வேண்டப்பட்டன.

2010 மாச்சு 01 - கடன் அட்டை வழங்கல் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு அறிவித்தலொன்று வழங்கப்பட்டது.

2010 மாச்சு 11 - 2008 ஒத்தோபர் 31ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 02/17/800/0006/01 இன் கீழ் வழங்கப்பட்ட இறக்குமதி உண்டியல்களின் கொடுப்பனவு மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீளப் பெறப்பட்டது.

2010 மாச்சு 22 - வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் மற்றும் எந்தவொரு அனர்த்தத்தாலும் இலங்கையில் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளை வழங்கும் பொருட்டு "சௌபாக்கிய" எனப் பெயரிடப்பட்ட புதிய கடன் திட்டமொன்று உருவாக்கப்பட்டது.

2010 மே 07 - வட மாகாணத்தில் புதிய ஆறு வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2010 மே 14 - இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன தொடர்பாக சந்தேகத்திற்குரிய ஆட்களை புலனாய்வு செய்வதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் வசதியளிக்கக்கூடிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் விதத்தில் இலங்கைச் சுங்கத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டது.

2010 மே 26 - செயற்படாக் கடன்கள் என வகைப்படுத்தப்படுவதற்கு புதிய வசதிகள் எதனையும் தேவைப்படுத்தாமல் அதே வாடிக்கையாளரின் பெயரில் அல்லது வேறு எவரேனும் தரப்பினரின் பெயரில் செயற்படாக் கடன்களின் மீள் கொடுப்பனவிற்காக கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு 2011 யூன் 30 வரை உரிமம் பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

2010 யூலை 01 - வடமாகாணத்தில் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தலை முதன்மைத் தொழிற்பாடாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கி அதன் நான்காவது மாகாண அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தது.

2010 யூலை 09 - இலங்கை மத்திய வங்கியின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.25 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2010 யூலை 26 - கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், கோல்டன் கீ கிரடிட் காட் கம்பனி லிமிட்டெட்டினுடைய அனைத்து தகைமையுடைய பிணைய வைப்பு உடமையாளர்களதும் 2008 திசெம்பர் 31இல் நிலுவையாக உள்ள பிணைய வைப்புக்களின் 75 சதவீதம் அல்லது ரூபா 100,000 இவற்றுள் குறைவானது என்ற அடிப்படையில் செலுத்தப்பட்டது.

2010 யூலை 29 - வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்படானது பின்வரும் மட்டங்களுக்கு அதிகரிக்கப்பட்டது.

**புதிய வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு (ரூபா பில்லியன்)**

| வங்கியின் வகை | 2010இலிருந்து | 2012இலிருந்து | 2014இலிருந்து |
|---|---|---|---|
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 0.2 | 4.0 | 5.0 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 2.0 | 2.5 | 3.0 |

**ஏற்கனவேயிருக்கும் வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு (ரூபா பில்லியன்)**

| வங்கியின் வகை | 2011இறுதி | 2013இறுதி | 2015இறுதி |
|---|---|---|---|
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 3.0 | 4.0 | 5.0 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 2.0 | 2.5 | 3.0 |

| | | |
|---|---|---|
| 2010 ஓகத்து 08 | - | இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு விதம் 50 அடிப்படைப் புள்ளிகளினால் 9.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2010 ஓகத்து 19 | - | அனைத்து பட்டியலிடப்படாத உரிமம் பெற்ற வங்கிகளும் 2011 திசெம்பர் 31 அளவில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 2010 செத்தெம்பர் 09 | - | அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் 2010 ஒத்தோபர் இறுதியளவில் வட்டி வீதங்களை கீழ்வரும் மட்டங்களுக்காவது குறைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.<br>• வீடமைப்புக் கடன்கள் மீதான வட்டிவீதம் ஆண்டுக்கு 14 சதவீதம்<br>• கடனட்டை முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 24 சதவீதம்<br>• ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டிவீதங்கள் ஆண்டுக்கு ஏறத்தாழ 1 - 2 சதவீதம். |
| 2010 செத்தெம்பர் 27 | - | சிறப்பாக குறிப்பிடப்பட்ட வகைக்குள்ளிருக்கும் செயற்படும் கடன்கள், முற்பணங்கள் மற்றும் கொடுகடன் வசதிகள் மீதான பொதுவான ஏற்பாட்டை தற்போதிருக்கும் தேவைப்பாடான 1 சதவீதத்திலிருந்து 2012 சனவரி 1 அளவில் 0.5 சதவீதத்திற்கு, 2010 ஒத்தோபர்1இல் ஆரம்பித்து காலாண்டுக்கு 0.1 சதவீதம் என்ற ரீதியில் 5 காலாண்டுகளில் குறைப்பதற்கு வங்கிகளை அனுமதிக்கும் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2010 ஒத்தோபர் 01 | - | அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் கட்டாய அடிப்படையில் பங்குகொள்ளும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2010 ஒத்தோபர் 06 | - | பதிவு செய்யப்படும் முதல் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் ரூபா 50,000இலிருந்து ரூபா 500,000இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு ரூபா 50,000என்ற நிலையான வீதத்திலிருந்த வருடாந்த உரிமக் கட்டணமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் முன்னைய ஆண்டு இறுதியில் உள்ள மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் ரூபா 150,000இலிருந்து ரூபா 500,000என்ற அதிகரிக்கப்பட்ட வீச்சில் விதிக்கப்படும். |
| | - | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஏலங்கள் நிறுத்தப்பட்டன. |
| 2010 ஒத்தோபர் 28 | - | இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுடன் சந்தேகப்படும் நபர்களை விசாரிப்பதையும் வழக்குத் தொடர்வதையும் வசதிப்படுத்துவதில் நிதியியல் தகவலை பகிர்ந்து கொள்வதற்கு வங்காளதேச மத்திய வங்கியின் பணம் தூயதாக்கலை ஒழிக்கும் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. |
| 2010 நவெம்பர் 02 | - | அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் அவற்றின் வணிகத் தொழிற்பாடுகளை வெளியாருக்குக் கொடுப்பதிலிருந்து எழக்கூடிய இடர்நேர்வுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அறிவுறுத்தப்பட்டன. |
| 2010 நவெம்பர் 08 | - | உரிமம் பெற்ற வங்கிகளின் 2011இற்கான வருடாந்த உரிமக் கட்டணம் அவற்றின் முன்னைய ஆண்டு இறுதியுள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் ரூபா 2 மில்லியனுக்கும் ரூபா 10 மில்லியனுக்குமிடையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டது. |
| 2010 நவெம்பர் 23 | - | வடமாகாணத்தில் மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காணியைப் பிணையாகக் கொண்ட வேளாண்மைக் கடன்களுக்கு உத்தரவாதம் வழங்குவதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்தல். |
| 2010 நவெம்பர் 24 | - | பொருத்தம் மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுதல் உரிமம் பெற்ற வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் |
| 2010 திசெம்பர் 09 | - | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் அவற்றின் ஆற்றல் மற்றும் அதிர்வுகளுக்குத் தாக்குப் பிடிக்கும் தன்மை என்பவற்றை முன்னேற்றுவதற்காக அவற்றின் குறைந்தபட்ச மைய மூலதனத்தை 2012 சனவரி அளவில் ரூபா 100 மில்லியனிற்கும் மேலும் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டளவுகளில் முறையே ரூபா 150 மில்லியன், ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியனுக்கு அதிகரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| | - | இலங்கை மத்திய வங்கிக்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலாந்தர கூற்றுக்களுக்கான இணைய அடிப்படையிலான தரவு பரிமாற்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்றின் கிளையொன்றினை திறத்தல், இடத்தினை மாற்றுதல் மற்றும் கிளையை அல்லது வியாபாரத் தலத்தை மூடுவதற்கு வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரிடமிருந்து எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெறும் விதத்தில் முறைமைப்படுத்தப்பட்டது. |
| 2010 திசெம்பர் 27 | - | நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் பொதுக் கம்பனியின் குறைந்தபட்ச வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட மூலதனமானது 2011 சனவரி 01 அளவில் ரூபா 100 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டதோடு அதற்குப் பின்பு 2015 சனவரி 01இல் ரூபா 300 மில்லியனாக ஆக இருக்கும் விதத்தில் ஒவ்வொரு வருடமும் ரூபா 50 மில்லியனால் அதிகரிக்கப்படும். |

- பதிவு செய்யப்பட்ட நிதி மற்றும் குத்தகை அமைப்புக்கள் தொடர்பில் விண்ணப்பம், முதல் பதிவு மற்றும் வருடாந்த புதுப்பித்தல் என்பவற்றின்போது செலுத்தப்படத்தக்க கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. இவற்றுள் புதுப்பித்தல் மீதான வருடாந்தக் கட்டணமானது, பதிவு செய்யப்பட்ட நிதி மற்றும் குத்தகை அமைப்புக்களின் முன்னைய ஆண்டிறுதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் ரூபா 150,000 இலிருந்து ரூபா 500,000 என்ற வீச்சில் இருக்கும்.

2011 சனவரி 11
- பங்குப் பிணைப்படுத்தல் வர்த்தகத்தின் மூலம் வெளிப்படும் சொத்து விலைக் குமிழ்கள் மற்றும் விலைகளின் தளம்பல்களிலிருந்து எழக்கூடிய இடர்நேர்வைக் குறைப்பதற்குரிய பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைக் கடைப்பிடிக்கும்படி அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டன.
- இலங்கை மத்திய வங்கியின் மீள் கொள்வனவு வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டு 7.00 சதவீதமாக்கப்பட்டதுடன் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கபட்டு 8.50 சதவீதமாக்கப்பட்டது.

2011 பெப்புருவரி 04
- இலங்கை மத்திய வங்கி “ அபிவிருத்தி சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள்” என்ற தொனிப் பொருளில் சுற்றோட்டத்திற்கான புதிய நாணயத்தாள் தொடர்களை வெளியிட்டது. இது வங்கியின் 11வது நாணயத் தாள் தொடராக இருப்பதுடன் ரூபா.20, ரூபா.50, ரூபா.100, ரூபா.500, ரூபா 1000, மற்றும் ரூபா 5000ஆகிய பெறுமானங்களை உள்ளடக்கியிருக்கும்.

2011 மாச்சு 09
- செல்லிடத் தொலைபேசியூடான கொடுப்பனவு முறைமையை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிக்கும் நோக்குடன் செல்லிடத் தொலைபேசியூடான கொடுப்பனவுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

## அடுத்து வருபவை

- இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலதன திட்டமிடல் செயற்பாட்டை வலுப்படுத்துவதற்காக பாசல் II இன் கட்டம் II ஐ நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டல்களை வழங்கல்
- வங்கிகளுக்கு வாடிக்கையாளரின் உரிமை ஆவணம் மற்றும் பணிப்புரைகளை அவற்றைப் பின்பற்றுவதற்காக வழங்குதல்
- வெளிப்படுத்துகை முன்னேற்றத்துக்காக இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45ஐ பின்பற்றுவதை வசதிப்படுத்துல்
- வங்கித் தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை இறுதிப்படுத்தல்.
- ஒன்றிணைந்த மேற்பார்வை மீதான கட்டமைப்பை முறைப்படுத்துதல் .
- வங்கிகளின் உள்ளக தரப்படுத்தல் முறைமையை மேலும் துல்லியமாக்கல்.
- பாசல் III முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்.
- இணையத்தினூடான கொடுப்பனவு முறைமையை ஒழுங்கு முறைப்படுத்தும் நோக்குடன் இணையத்தினூடான கொடுப்பனவு வழிகாட்டல்களை வழங்குதல்.
- புதிய நிதியியல் வணிகச் சட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை முன்னெடுத்தல்.
- இஸ்லாமிய வங்கிகளை உள்ளடக்கும் வரைவு நுண்மதி பணிப்புரை வழங்கப்பட்டது